**தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2020 மே 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 24 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச்செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் இறுதி அறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்கான பெறுகைகள் ரூபா 57,717,141 ஆக காணப்பட்ட போதிலும் இது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 30,750 குறைத்து ரூபா 57,686,391 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றினை தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரி அச்சீட்டுத்தாள் திணைக்களப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | இத் தொகை Sub – 02 155011 தொடர்பாக ரூபா 30,750.00 தொகையான குறுக்குப்பதிவுத் தொகையொன்றாக காணப்பட்டது. இது பிழையாக வேறு முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் கட்டுநிதி திருத்தக் கூற்றில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | ஏ.சீ.ஏ 5 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கொடுப்பனவு ரூபா 73,365,521 ஆகக் காணப்பட்ட போதிலும் இது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 11,250 | நிதிச்செயலாற்றல் கூற்றை தயாரிப்பதற்கு முன்னர் ஏ.சீ.ஏ 5, திறைசேரி அச்சீட்டுத்தாள் மற்றும் திணைக்களப் பதிவேடுகள் ஒப்பீடு செய்யப்பட | அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தால் 194011 இற்கு செலவு வைக்கப்பட வேண்டிய தொகையொன்றாக இத்தொகை காணப்பட்ட போதிலும் 27011 இற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. சீர்செய்வதற்காக 2019 திசெம்பர் 31 இல் ஜீ 122 |

| | | |
|---|---|---|
| குறைத்து ரூபா 73,354,271 ஆக காட்டப்பட்டிருந்தது. | வேண்டும். | படிவத்தின் மூலம் இது சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியால் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தால் 2020 யூன் மாத பொழிப்பின் மூலம் இது சீர்செய்யப்பட்டுள்ளது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் 21 சந்தர்ப்பங்களில் பொறுப்புப் பெறுமதியாக ரூபா 1,437,911 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம் மீதி நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றை தயாரிப்பதற்கு முன்னர் திறைசேரி அச்சீட்டுத்தாள்கள் மற்றும் திணைக்களப் பதிவேடுகள் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைப்பு 270 இன் கீழ் செலுத்தப்பட வேண்டிய உள்ளபடியான பொறுப்புக்கள் காணப்படாத போதிலும் சில உப அலுவலகங்கள் பொறுப்புக்களாக அவர்களிற்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்த பொறுப்புக்களிற்கு 2019.12.31 இல் அல்லது அதற்கு முன்னர் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்து பொறுப்புக்களையும் தீர்ப்பனவு செய்திருந்தன. எனினும் அவை முறையாக இணையத்திற்கு உள்வாங்கப்படாததன் (Web upload) காரணமாக முறைமையானது தீர்க்கப்படாத பொறுப்புக்களாக அவற்றைப் பட்டியலிட்டிருந்தது. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் சொத்துக்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டு அல்லது அழிக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 26,316,881 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றில் (ஏசீஏ 6) விற்பனைகளாக குறிப்பிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது இது சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுக்கல் வாங்கல்களின் தன்மையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். | கணனிக்கு (CIGAS) சொத்து ஒன்றை உள்ளீடு செய்வதில் எதாவது பிழையேற்பட்டால் இந் நிகழ்ச்சித்திட்டத்தை சீர் செய்வதற்கு விற்பனை ஒன்றாக அல்லது கழிப்பனவாக குறிப்பிடப்பட வேண்டியிருந்தது. இதன் காரணமாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் குறைபாடு காணப்படுகின்றது. |

**1.6.3 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தல் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகம் அவ்வாறு பேணியிருக்கவில்லை. | வாகன நிரற்படுத்தல் பதிவேடு பேணப்பட வேண்டும். | சரியாகத் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |

**1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாடுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் பிரதான கூறொன்றாக மாவட்டச் செயலகத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை நாங்கள் ஸ்தாபித்துள்ளதுடன் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதிக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை காலரீதியாக பரீட்சிக்கின்றதிலிருந்து அவ்வறிக்கைகளின் பிரதிகள் காலத்திற்கு காலம் அம்பாறை மாவட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகம், மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் மற்றும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோருக்கு அனுப்பப்படுகின்றன.<br><br>கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் எங்களால் |

தயாரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க இப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிக ஆபத்தான விடயங்களை மீளப் புலனாய்வு செய்வதற்கு தாங்கள் கவனம் செலுத்துவதை நான் விரும்புவதுடன் எதிர்காலத்தில் இவ் மீள் புலனாய்வு செய்யும் முறை தொடர்பாக உங்களுக்கு நாங்கள் அறிவிப்போம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) xii ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | வெளிநாட்டு விடுமுறைக்கான விண்ணப்பமானது விடுமுறை தொடங்கும் திகதிக்கு ஆகக்குறைந்தது 03 மாதங்களிற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் 2019 நவம்பர் மாதத்தில் 14 நாட்களினுள் வெளிநாட:டு விடுமுறைக்காக விண்ணப்பித்திருந்தார். எனினும் விடுமுறைக்கான அங்கீகாரம் சனவரி 23 வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை | உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். | அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் III திருமதி. கே. எம். பாத்திமா ஜாசியா, வெளிநாடு செல்வதற்கான விடுமுறைக்காக விண்ணபித்திருந்ததுடன் 2019 நவம்பர் 11 இல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சேவை உறுதிப்படுத்தல் கடிதம் போன்ற ஆவணங்கள் இல்லாததன் காரணமாக பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அனைத்து ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டு 2020 பெப்ரவரி 14 இல் பொது நிர்வாக அமைச்சிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | . | | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். |
| (ii) | xii ஆம் அத்தியாயத்தின் 23.18 ஆம் பிரிவு | திணைக்களத் தலைவர் அரச உத்தியோகத்தர் ஒருவரால் எடுக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறை தொர்பான அறிக்கையொன்றை தயாரித்து மாதாந்த அடிப்படையொன்றில் அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை . | - மேற்படி - | நாட்டிற்கு வெளியே அரசாங்க உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட விடுமுறை தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்<br>----------------------------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 168(2) | பொது 172 படிவத்தில் பெறுவனவுச்சிட்டை வழங்கும் போது இரண்டு பக்க காபன் தாள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் தெஹிஅத்தகண்டிய பிரதேச செயலகம் இந்நடைமுறையை பின்பற்றியிருக்கவில்லை . | உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். | பொது 162 படிவத்தில் பெறுவனவு சிட்டைகளை வழங்கும் போது உரிய உத்தியோகத்தர்கள் இரண்டு பக்க காபன் தாளை பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அந்நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 177(1) | சேகரிக்கப்பட்ட அரசாங்கப்பணம் நாளாந்தம் அல்லது இயலுமானவரை உடனே செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தெஹிஅத்தகண்டிய பிரதேச செயலகம் 07 மாத கால தாமதமொன்றுடன் பணத்தை செலுத்தியிருந்தது. | - மேற்படி - | உரிய கிராம உத்தியோகத்தர்கள் செலுத்தப்படாத தொகைகளின் (உரிய பெறுவனவுச்ச்சிட்டை பின்னிணைப்பு 03) கொடுப்பனவை பூர்த்திசெய்துள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு அவர்களை எச்சரித்து உரிய அதிகாரிகளுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 210(1) | கழிவுகளை பெற வேண்டியிருந்தால் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய காலத்தினுள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கறைப்பற்று மற்றும் அம்பாறை பிரதேச செயலகங்கள் உரிய காலத்தினுள் தண்ணீர் பட்டியல் நிலுவைகளை செலுத்தாததன் காரணமாக கழிவுகளை பெற முடியாதிருந்தது. | - மேற்படி - | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய காலத்தில் செலுத்தப்படாத கழிவுகள் அவ் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படும் என உரிய பிரதேச செயலகங்கள் அறிவித்திருந்தன. சம்மாந்துறை, அம்பாறை, சாய்ந்தமருது, அக்கறைப்பற்று பிரதேச செயலாளர்கள் கணக்காய்வின் பின்னர் உரிய திகதியில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு கழிவுகள் பெறப்பட்டிருந்ததென அறிக்கையிட்டிருந்தனர்.<br><br>**<u>சாய்ந்தமருது</u>**<br>---------------------<br>சாய்ந்தமருது பிரதேச செயலகம் 3 தளங்களைக் கொண்டிருக்கின்றது. இவ் அலுவலகத்திற்கான தண்ணீர் விநியோகம் நிலத்தடியிலும் கட்டிடத்திற்குள்ளேயும் காணப்படுகின்றது. இங்கு நீர்க்கசிவு முன்னர் காணப்படவில்லை. ஆனால் மிகப்பெரிய தண்ணீர் பட்டியல் பெறப்பட்டதன் பின்னர் புலனாய்வின் போது நீர்க்கசிவொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. நீர் வழங்கல் சபை நீர்க்கசிவை பரீட்சித்து சீர்செய்துள்ளது. இதன் காரணமாக தண்ணீர் பட்டியல் கொடுப்பனவில் தாமதமொன்று காணப்படுகின்றதென பிரதேச செயலாளர் அறிவித்திருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) 2019 யூன் 17 ஆம் திகதிய நிதி அமைச்சின் 4/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றிக்கை | மின்சாரப் பட்டியல்களின் பெறுமதியில் 5 சதவீதத்தை சேமிக்கும் நோக்கில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தில் உள்ள 02 மின்மானிகளின் பயன்பாடு அதிகரித்திருந்தது. | பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். | அக்கறைப்பற்று பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் உள்ள வளிப்பதனாக்கிகள் நீண்டகாலமாக செயற்படாததன் காரணமாக திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தன. உரிய காலப்பகுதியின் போது அலுவலக இட வசதி போதாமை காரணமாக புதிய பட்டதாரிப் பயிலுனர்கள் மாநாட்டு மண்டபத்தில் இருக்க வேண்டியதன் காரணமாக மின்சாரப் பட்டியல்கள் அதிகரித்திருந்தன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் மாதாந்த கட்டுநிதி திட்டமிடல், தேவைப்பாடு மற்றும் பெறுவனவு தொடர்பான பகுப்பாய்வின் போது மீளாய்வாண்டின் போது ரூபா 7,903 மில்லியன் கோரப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,431 மில்லியன் குறைவொன்றுடன் ரூபா 5,472 மில்லியன் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | விண்ணப்பித்த கட்டுநிதித்தொகை முழுவதையும் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ் அலுவலகத்திற்கு தேவையான மாதாந்த கட்டுநிதிகள் திட்டமிடப்பட்டு விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் பணவளிப்பு நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆண்டினுள் இதனைச் செலுத்துவதற்கு சாத்தியமற்று இருந்ததால் கையிலுள்ள விலைப்பட்டியல்களாக கருத்தில் கொள்ளப்பட்டு கொடுப்பனவு எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| Green Clubs நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4,050,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 2,675,592 தொகை மாத்திரமே உரிய நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். | நிதி அமைச்சு செயலாளரின் 2019.08.19 ஆம் திகதிய பீடி/ஜீபிஎஸ்/115/09/65/எச்ஏ–2019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. 2019.09.09 இல் பிரதேச செயலகத்தால் செயற்திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக செயற்திட்டப் பணிப்பாளருடன் கலந்துரையாடிய போது அந்நேரத்தில் காணப்பட்ட அரசியல் அழுத்தம் காரணமாக இது தற்காலிகமாக பிற்போடப்பட்டிருந்தது. |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6 பிரதேச செயலகங்களில் ரூபா 10.5 மில்லியன் தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைத்தீர்வைகள் உரிய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களிற்கு அனுப்பப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புக் கணக்கில் காணப்பட்டது. | ஏனைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைத்தீர்வைகள் விரைவாக உரிய நிறுவனங்களிற்கு அனுப்பப்பட வேண்டும். | கட்டுநிதிப் பற்றாக்குறை காரணமாக கொடுப்பனவுகள் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்ததுடன் இந்த ஆண்டில் உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான கொடுப்பனவுகளை உரிய பிரதேச செயலகங்கள் பூர்த்தி செய்திருந்தன. |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டமிடல் தொடர்பான செயலாற்றல் மற்றும் ஏனைய வடிவமைப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை மாவட்டச் செயலகம் தயாரித்திருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி விபரங்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிக்கும் போது அனைத்து தொடர்புபட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்காக அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி விரிவான செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம் | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் | - மேற்படி - | - மேற்படி - |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒருமைப்பாட்டு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் கல்முனை | செயற்திட்டத்திற்காக குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு | 2019 நவம்பர் 11 இல் கார்மெல் பட்டுமா தேசிய பாடசாலைக்கான உள்ளக விளையாட்டு மைதானத்தின் நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் |

| | | | |
|---|---|---|---|
| | பிராந்திய அலுவலகத்தில் கார்மெல் பட்டுமா தேசிய பாடசாலைக்காக உள்ளக விளையாட்டு மைதானம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு 2019 நவம்பர் 11 இல் ஒப்பந்ததாரர் ஒருவருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 25 இல் பூர்த்திசெய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் எந்தவொரு வேலையும் 2019 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிலவிய காலநிலை காரணமாக 2019 திசெம்பர் 25 இல் வேலையை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. 2019 இன் தடைப்பட்ட வேலைக்காக அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததென பிரதேச செயலாளர் அறிக்கையிட்டிருந்தார். நிதி அமைச்சால் காலத்திற்கு காலம் செயற்திட்டங்களை தாமதமாக ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தமை இதற்கான காரணமாகும். |
| (ஆ) | நீண்டகாலமாக இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுதல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 13 மில்லியன் பெறுமதியான 12 வேலைகள் மற்றும் ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான 05 வேலைகளை அக்கறைப்பற்று பிரதேச செயலகம் கணணக்காய்வுத் திகதியான 2020 சனவரி 23 வரை ஆரம்பித்திருக்கவில்லை. | - மேற்படி - | 2019 திசெம்பர் 22 மற்றும் 26 இல் 05 உரிய செயற்திட்டங்களில் 03 இற்கான விலைமனுக்களைக் கோருவதற்கு அக்கறைப்பற்று பிரதேச செயலகம் தீர்மானித்திருந்த போதிலும் 2019.11.21 இன் பின்னர் எந்தவொரு செயற்திட்டத்தையும் அமுல்படுத்த வேண்டாம் என நிதியமைச்சு அதன் 2019.11.20 ஆம் திகதிய பீடி/ஜீபிஎஸ்/155/09/01/எச்ஏ–2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அறிவித்திருந்தது. 03 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 02 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் SACOSAN மலசலகூட நிர்மாணச் செயற்திட்டத்தின் ஊடாக 28 நபர்களிற்கு மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அக்கறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு ரூபா 1.4 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 500,000 பெறுமதியான 100 மலசலகூடங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 900,000 பெறுமதியான 18 மிகுதி மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | **இரத்துச்செய்யப்பட்ட மலசலகூடங்கள்**<br>----------------------------------<br>மலசலகூட நிர்மாணம் தொடர்பாக அமைச்சால் அனுப்பப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட முடியாதிருந்ததெனவும் போதியளவு வருமான மூலம் காணப்படாததன் காரணமாக அவர்கள் அதிக பங்களிப்பு செய்ய முடியாதிருந்ததெனவும் எழுத்தில் அவர்கள் அறிவித்திருந்ததனால் மலசலகூடங்கள் தேவையாக இருந்த 28 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவற்றில் 18 பயனாளிகளின் பெயர்கள் இரத்துச்செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) | தேவாலயத்தை புனரமைப்புச் செய்தல், விளையாட்டு உபகரணங்கள், வாராந்தச் சந்தை, கொங்கிறீட் வீதிகளை புனரமைத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக RIDP, ONUR, Task Force on Resettlement of Protected IDPS, Lagoon Conservation and Development, Let's together for nation and DCB போன்ற செயற்திட்டங்களின் கீழான நிதியொதுக்கீடுகளுடன் 15 பிரதேச செயலகங்களுக்கான முழு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் ரூபா 170,631,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் காணிப் பிரச்சனைகள், தவறாக புரிந்துகொள்ளுதல் மற்றும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் உரிய செயற்திடங்களை மீளாய்வாண்டின் போது அமுல்படுத்த முடியாதிருந்தன. | - மேற்படி - | மீள்குடியேற்ற அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாடுகள் மூலம் ரூபா 110,631,000 கூட்டுமொத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் 15 பிரதேச செயலகங்களில் பல்வேறு காரணங்களினால் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்தன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியேற்பாடுகள் மூலம் அமுல்படுத்தப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு செயற்திட்டமும் 2019 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருக்காததுடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய அனைத்து செயற்திட்டங்களும் அவ்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தன. பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெஹிஅத்தகண்டிய, கல்முனை (எம்), சம்மாந்துறை, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1.14 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்கள் மாத்திரமே 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட முடியாதிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நீண்டகால உள்ளக இடமாற்ற மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் அல்ஜெசிரா முதியோர் அமைப்பிற்கான புடைவைக் கைத்தொழிலிற்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 01 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கட்டிட வசதிகளை கொண்டிருக்காத இவ் அமைப்பிற்கு 06 புடைவைக் கைத்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கிராம உத்தியோகத்தர் சங்க கட்டிடத்தின் பகுதியொன்றில் அவற்றில் 02 மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றதுடன் மிகுதி 04 உபகரணங்களும் இடவசதி காணப்படாததன் காரணமாக பயன்படுத்தப்படாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆகையால் அவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் அதற்காக போதியளவு இடவசதி காணப்படுகின்றதா என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | அல்ஜெசிரா முதியோர் கைவினைப் பொருள் கைத்தொழிலிற்காக அமைப்பிற்கு அக்கரைப்பற்று 14 கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு அச் சங்கங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கைவினைப் பொருள் உபகரணம் வழங்கப்பட்டிருந்தது. சங்கத்தால் கட்டிடத்தின் பகுதியொன்று பயன்படுத்தப்படுவதன் காரணமாக போதியளவு இடவசதி காணப்படவில்லை. |

## 3.3 செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக நலன்புரிகள் அமைச்சின் முதியோர்களிற்கான தேசிய செயலகத்தின் 2019 யூலை 30 ஆம் திகதிய என்எஸ்ஈ/டிஈவி/02101 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நாவிதன்வெளி மற்றும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் முதியோர் பகல் பராமரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,999,000 பெறுமதியான காசோலைகளை வழங்குவதற்கும் 2019 ஒக்தோபர் 30 இற்கு முன்னர் முதியோர்களிற்கு இதனை கையளிப்பதற்கும் | குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். | கல்முனை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் நிர்மாண வேலை பூர்த்தியடைந்த பின்னர் 2020 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நாவிதன்வெளி நிலையம் 2019.10.30 இற்கு முன்னர் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் காலப்பகுதியை நீடிப்புச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் இது 2019.11.30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. (உரிய |

| | | | |
|---|---|---|---|
| | இணங்கப்பட்டிருந்த போதிலும் இக் கட்டிடங்களின் நிர்மாணம் 2019 திசெம்பர் 12 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | ஆவணங்கள் பின்னிணைப்பு 8 ஆக இணைக்கப்பட்டுள்ளது). 2019.11.28 இல் வேலை பூர்த்தி செய்யப்பட்டதென ஒப்பந்ததாரர் அறிவித்திருந்த போதிலும் சிறிய பகுதி மீதமாக காணப்பட்டதன் காரணமாக பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் 2019.12.12 இல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இரண்டு பாடசாலைகளிற்காக சிமாட் (Smart) வகுப்பறைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 06 மில்லியன் தொகையை கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்திருந்து. சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்தான 2019 திசெம்பர் 16 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 3,860,000 பெறுமதியான உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு பணம் கோரப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலகம் இச் செலவினத்தை பொறுப்புக்களாக கணக்குகளில் காட்டியிருந்தது. எனினும் அவ் உபகரணம் 2020 பெப்ரவரி 19 வரை உரிய பாடசாலைகளிற்கு கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உபகரணத்தை பெற்ற பின்னர் மாத்திரமே செலவினம் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3.4 நிதியளிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாழ்வாதார அபிவிருத்தி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான கிராம சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடுகள் | பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்படுவதன் மூலம் கிராம சக்தி செயற்திட்டத்தின் கீழ் கிராம சக்தி ஜனதா சமித்திக்கு வழங்கப்பட்ட நிதிகள் முழுமையாக | உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளின் கீழ் கிராம சக்தி ஜனதா செயற்திட்டத்தின் கீழான அனைத்து செயற்திட்டங்களும் 2018.12.31 அளவில் பூர்த்தி |

வழங்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 59,999,700 தொகை செலவின விடயம் 001-2-6-11-2-2202 இன் கீழ் செலவினமாக காட்டப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கத்திற்காக செலவிடப்படாமல் பிரதேச செயலகங்களால் தெரிவு செய்யப்பட்ட 66 கிராம சக்தி சமுதாய சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் ரூபா 49,948,900 தொகை விடப்பட்டிருந்தது. மேலும் முதலாம் கட்டத்திற்காக ரூபா 66 மில்லியன் தொகையும் 2019 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 64.4 மில்லியன் தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செலவினங்களாக முறையே ரூபா 53 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் தொகைகள் காட்டப்பட்டிருந்தன. எனினும் இதில் ரூபா 54,756,118 தொகை ஆண்டின் இறுதியில் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் உரிய கிராம சக்தி (பிரஜா) ஜனதா சமித்தி வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

பயன்படுத்தப்பட முடிவதுடன் உரிய சங்கங்களிற்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும்.

செய்யப்பட்டிருந்தன.

நுண்நிதி கடன்களாக சங்கங்களின் உறுப்பினர்களிற்கு சுழற்சிக் கடன்களை வழங்குவதற்கு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இக் கடன் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களிற்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகள் மற்றும் கடன்களை வழங்குவதற்கு தேவையான புத்தகங்கள் என்பவற்றை வழங்குவதற்கு சனாதிபதி செயலகத்தால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்காத போதிலும் இணையான நிகழ்ச்சித்திட்ட அனுபவங்களை பயன்படுத்தி இந் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் இயலளவைக் கட்டிழெுப்புதல் மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடாத்துவதற்கு மாவட்டத்தில் பயிற்சி வளவாளர்கள் காணப்படாததன் காரணமாக பயிற்சிகளை நடாத்த முடியாதிருந்ததுடன் அவர்களை வெளியிலிருந்து கொண்டுவருவதற்கு அரசாங்கம் அங்கீகரித்த விலைவீதங்களுடன் இணங்காமை. இதன் காரணமாக இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் இந்த ஆண்டில் முழுமையாக விடுவிக்கப்பட முடியாதிருந்தன.

2019 ஆம் ஆண்டின் முதலாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளிற்கான கட்டுநிதிகளை கோருவதன் மூலம் காலத்திற்குக் காலம் பெறப்பட்ட நிதிகளை வைப்புச் செய்வதன் மூலம்

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது தேர்தல் நடவடிக்கைகளின் ஆரம்பத்துடன் செயற்திட்டங்களை ஆரம்பிப்பது சாத்தியமற்றிருந்தது. (2019.11.20 ஆம் திகதிய நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம்)<br><br>இரண்டாம் கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராம சக்தி சமித்தி கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்வதிலுள்ள தாமதங்கள் மற்றும் நிதிகள் கிடைக்கப்பெறாமை காரணமாக செயற்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாதிருந்தன என திட்டமிடல் பணிப்பாளர் அறிக்கையிட்டிருந்தார். இவ் ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்காக நாங்கள் திட்டங்களை தயாரித்திருந்ததுடன் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டு தேவையான அறிவுரைகள் அவர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன என்பதை நான் தயவுடன் உங்களிற்கு அறியத்தருகின்றேன். |

**3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ''சபூர்'' சனச சங்கம் 2011 யூலையில் அரச காணி அதிகாரச்சட்டத்தின் கீழ் மாதிரிப் பண்ணையொன்றை உருவாக்குவதற்காக நீண்ட கால குத்தகை (30 ஆண்டுகள்) | நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் போது அவை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும். | இக் காணிகள் தொடர்பான குத்தகையை இரத்துச் செய்வதற்கு மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததால் சம்மாந்துறை பிரதேச செயலாளரால் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் 2000 மார்ச் 23 இல் சென்னல் கிராமம் 01 இல் அமைந்துள்ள 0.847 ஹெக்டெயர் அரசாங்க காணியை வழங்கியிருந்தது. காணி உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் பல துண்டுகளாக காணி பிரிக்கப்பட்டுள்ளதுடன் 22 பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள், 04 பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் மற்றும் அடித்தளங்களுடனான 03 நிரந்தரக் கட்டிடங்கள் என்பன காணப்படுகின்றதென கிராம உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோர் அறிக்கையிட்டிருந்தனர். எனினும் 2020 பெப்ரவரி 18 வரை காணியை மீளக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறு செய்ய தவறினால் அதற்கெதிராக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முடியாதிருந்ததென பிரதேச செயலாளர் அறிக்கையிட்டிருந்தார். எனினும் 2020.05.26 ஆம் திகதிய ஈபி/28/எல்பீ/எல்எஸ்/ஏஎம்பி/ஜீஈஎன் ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இக் குத்தகைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான ஆவணங்களை வழங்குமாறு மாகாண காணி ஆணையாளர் கோரியிருந்தார். அதற்கிணங்க பிரதேச செயலாளர் பின்வரும் நடவடிக்கையை எடு:த்திருந்தார்.<br>(i) கிராம உத்தியோகத்தர் அறிக்கைகள்<br>(ii) காணியின் தற்போதைய நிலைமை தொடர்பான கள அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. |
| (ஆ) | நீண்டகால குத்தகையொன்றின் அடிப்படையில் இரண்டு குத்தகைக்கு பெறுபவர்களிற்கு 0.19 ஹெக்டெயர் காணியை சம்மாந்துறை பிரதேச செயலகம் வழங்கியிருந்த போதிலும் ரூபா 87,774 நிலுவை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் நிலுவைக் குத்தகை வாடகைகளை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சென்னெலி கிராமம் 01 இன் மாதிப் பண்ணைக்கான காணியிலிருந்து ரூபா 51,770.00 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வியாபாரத்திற்காக கிராமம் குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதிலும் இறந்தவரின் மனைவி திருமதி. ஹாஜரா ஹபூரிற்கு அங்கீகாரம் வழங்கும் செயன்முறையில் மாகாண காணி ஆணையாளர் தற்போது உள்ளார். அங்கீகாரம் பெறப்பட்டதும் அறவீடுகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | “தேசத்திற்கு மகுடம் 2013” அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கைச்சாத்திட்ட ஐந்து செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது தமன பிரதேச செயலகம் ரூபா 6,512,909 தொகையை தவறாக பயன்படுத்தியிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | பிரச்சனைக்குரிய நிலைமைக்காக மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தமன பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கைகள் தொடர்பாக தமன பிரதேச செயலகத்தின் முன்னாள் உத்தியோகத்தர்களால் காலத்திற்கு காலம் இச் செயற்திட்டங்களிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| | | எனினும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வது தொடர்பான பிரச்சனைக்குரிய நிலைமை அறிக்கையிடப்பட்ட பின்னர் இவ் விடயம் புலனாய்வு செய்யப்பட்டது. இதற்கான அறிக்கைகள் இவ் அலுவலகத்தின் பிரதம பொறியியியலாளர் பெற்றிருந்தார். அவ் அறிக்கைகள் உங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன் பொலிஸின் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு இது தொடர்பாக விசேட புலனாய்வொன்றை மேற்கொள்கின்றதுடன் மேலதிக புலனாய்வுகளிற்காக உரிய கோவைகளை அவர்களின் பாதுகாப்பில் எடுத்துள்ளனர் என்பதை நான் தயவுடன் உங்களிற்கு அறியத் தருகின்றேன். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 266 வெற்றிடங்கள் பொருத்தமானவாறு நிரப்பப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசிய பதவிகளிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | (அ),(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினரின் பிரகாரம் 2019.12.31 இல் உள்ளவாறு 266 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் எண்ணிக்கையை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு எனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்காததால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு காலத்திற்குக் காலம் காணப்படுகின்ற வெற்றிடங்கள் அறிவிக்கப்படுகின்றன என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்லைன் முறைமை ஊடாக ஒவ்வொரு இரண்டுவாரகாலத்திற்கும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணி தரவுகள் நாளதுவரையாக்கப்படுகின்றன |
| (ஆ) | தெஹியத்தகண்டிய பிரதேச செயலகத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிர்வாக உத்தியோகத்தர், மேலதிக மாவட்டப் பதிவாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் போன்ற 27 பிரதான வெற்றிடங்கள் காணப்பட்டன. | பிரதேச செயலக மட்டத்தில் காணப்படும் அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | |

என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
2019.12.31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்னிணைப்பு 10 இல் இணைத்துள்ளேன்.